## முதன்மை சார்பு நீதிமன்றம், திருப்பூர்.

P.W.–2

O.S.No. 331/2018

2022ம் ஆண்டு டிசம்பர் மாதம் 05ம் நாள் வாக்குமூலம் 1969ம் ஆண்டு விதி 44 ஏற்பாட்டின்படி திரு.பா. செல்லதுரை, பி.எஸ்.சி., பி.எல்., முதன்மை சார்பு நீதிபதி, திருப்பூர் அவர்களால் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : திரு.ஈஸ்வரன் | வயது: |
| த/பெ. : திரு. | முகவரி: |
| தொழில் : | |

**முதல் விசாரணை :**

முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் உண்மையானவை. பிரமாண வாக்குமூலத்தை படித்து பார்த்து அதில் உள்ள விபரங்களை தெரிந்து கொண்டு வழக்குரைஞர் முன்னிலையில் கையொப்பம் செய்தேன். அதை ஏற்றுக் கொண்டு நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை என் தரப்பில் குறியீடு செய்ய வேண்டுகிறேன். என்னுடைய ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிடப்பட்டு சரிபார்க்கப்பட்டது) **வா.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**குறுக்கு விசாரணை**

வாதி பாலமுருகன் இந்த வழக்கிற்கு பின்னிட்டு தாக்கல் செய்த 2 புகார்களிலும் தான் கிரையம் பெற்ற தாவாச்சொத்து 2 வதாக கிரையம் பெற்றதை ஒப்புக்கொண்டு நிலையில் என்னுடைய சாட்சியம் நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நானும், வாதியும் நேரடியாக தாவாச்சொத்தை பார்வையிட்டதாகவும் ஆவணங்களை பரிசீலனை செய்ததாகவும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தில் வாதி

சுவாதீனத்தில் இல்லை என்றால் சரியல்ல. ஆகையால் என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கதல்ல என்றாலும் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

(ஒம்) P.செல்லதுரை
முதன்மை சார்பு நீதிபதி
திருப்பூர்.

Compared with original and uploaded by Typist, PSJ Court, Tiruppur